பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 19 வைகாசி 24 ஐ: ஆகிர்: 18 இதழ்: 11
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 6-6-7

# திருமலையில் கோஷ்டி மோதல்

## ஒருவர் பலி! நிலைமை சீர்!

### டி. ஐ. ஜி. நேரில் விஜயம்

திருகோணமலையில் இரு கோஷ்டியினருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பின் விளைவாக ஒருவர் பலியானர், மற்றும் ஏழுபேர் காயமடைந்தனர். இக்கோஷ்டிப் பிரச்னையால் எழுந்துள்ள நிலைமையைச் சமாளிப்பதற்காக இராணுவமும் அழைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதே சமயம் திருமலையில் எழுந்துள்ள நிலைமையை நேரில் கண்காணிக்கும் பொருட்டு உதவிப் பொலிஸ் அதிபர் திரு. அனு செனிவிரத்தின நேரில் சென்றுள்ளார்.

இப்போது திருமலையில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள் (... பக்கம் பார்க்க)

# இன்று வேட்பு மனு தாக்கல்

# ஊர்வலங்களுக்கு இடமில்லை!

யாழ்ப்பாணம், திங்கள்

நாடு குடியரசானதைத் தொடர்ந்து, நாட்டின் இரண்டாவது தேசிய அரசுப் பேரவைக்கு நடைபெறும் முதலாவது பொதுத் தேர்தலின் முதலாவது கட்டம், இன்று பூர்த்தியாகும். கட்சி சார்பிலும், சுயேச்சையாகவும் தேர்தலில் குதிப்பவர்கள் இன்று தங்களின் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வார்கள்.

மாவட்டக் கச்சேரிகளிலும், செயலகங்களிலும், கொழும்புக் கச்சேரி, பிரதம பதிவாளர் அலுவலகத்திலும் அவ்வப் பகுதித் தேர்தல் அதிகாரிகளினால் இந்த நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

தேர்தல் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்பது அரசியல் கட்சிகளையும் சேர்ந்த சுமார் 500 பேர் தேர்தலில் குதித்திருப்பதாக மதிப்பிடப் படுகிறது. இன்று பகல் முழு விபரங்களும் தெரியும்.

### கட்சிகள் நிலைமை

அகில இலங்கை ரீதியாக நோக்கும்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 151 அபேட்சகர்களை நிறுத்தியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி 150 அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறது. லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியவை ஒருங்கிணைந்த இடதுசாரி ஐக்கிய முன்னணி 125 தொகுதிகளில் போட்டியிடுகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி 25 அபேட்சகர்களை (மட்டக்களப்பில் இருவர்) நிறுத்தியுள்ளது.

### அங்கீகாரம் பெற்ற கட்சிகள்

அடுத்த மாதம் 21ந் திகதி நடைபெறும் பொதுத் தேர்தலில் 9 கட்சிகளுக்குத் தேர்தல் ஆணையாளர் அங்கீகாரமளித்திருக்கின்றார். அவையாவன:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி (கை), ஐக்கிய தேசியக் கட்சி (யானை), லங்கா சமசமாஜக் கட்சி (சாவி), இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (நட்சத்திரம், மகாஜன எக்ஸத் பெரமுனை (வண்டிச் சில்லு), தமிழர்விடுதலைக் கூட்டணி (உதய சூரியன்), இலங்கைத் தமிழரசுக் கட்சி (வீடு), அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் (சைக்கிள்). இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்

(6-ம் பக்கம் பார்க்க)

## "தமிழன் வாழ அவன் ஆள வேண்டும்"

— எஸ். கதிரவேலுப்பிள்ளை

யாழ்ப்பாணம், திங்கள்

"தமிழன் வாழவேண்டும் என்றால் தமிழன் ஆளவேண்டும்; சுதந்திர புருஷர்களாக நாம் வாழவேண்டும் என்று நாம் எழுப்புகின்ற குரல் உலக அரங்கிலே பரவத் தொடங்கிவிட்டது" என்று கொக்குவில் மஞ்சத்தடியில் நடைபெற்ற தந்தை செல்வாவின் அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோப்பாய் வேட்பாளர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், எமது விடுதலை இயக்கம் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் உலகச் சரித்திரத்திலேயே தாக்கமுடைய சம்பவமாகும். தமிழனுக்குத் தமிழன் அடிமை என்ற நிலை மாறினால்தான் நமது சுதந்திரப் போராட்டத்திற்கு ஆயத்த நிலை உண்டாகும். அந்த நோக்குடனேதான் உடுப்பிட்டித் தொகுதிக்கு ஒரு வேட்பாளரை நியமித்துள்ளோம். எமது இனத்திற்குள்ளேயே சிறு பூசல்கள் இருப்பதனால் சிங்கள அரசு தனது கட்சிகளை எமது தொகுதிகளில் கேட்கவைக்கின்றது" என்று கூறினார்.

நல்லூர் வேட்பாளர் திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் "நான் வேறொரு பாசறையிலும், தலைமையிலும் வாழ்ந்தவன். ஆனால் 1972ம் ஆண்டு தொடக்கம் தந்தை செல்வா என்னையும் தன் பிள்ளையாக ஏற்றுக்கொண்டார். கடந்தகால அரசியல் ஏடுகளைப் புரட்டிப் பார்க்கும்போது தேர்தல் என்னும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே தமது இனத்தின் விடுதலைக்காகப் போராடியிருக்கிறார்கள். இந்த அடிப்படையிலேயே நாமும் தேர்தலை அணுகுகிறோம்" என்றார்.

மானிப்பாய் வேட்பாவர் திரு வி. தர்மலிங்கம் பேசுகையில் "அரசியலுக்கும் நேர்மைக்கும் தொடர்பில்லை என்று கூறியவர்களுக்குத் தந்தை செல்வா நல்ல பாடம் புகட்டிவிட்டார். தந்தைக்கு அஞ்சலிக் கூட்டங்கள் வைப்பதனாலோ, நினைவு மண்டபம் கட்டுவதினாலோ, கடமை முடிந்துவிடாது. அவரின் கனவை நினைவு மண்படம் கட்டுவதினாலோ, கடமை முடிந்துவிடாது. அவரின் கனவை நனவாக்குவதே நாம் செய்யும் பணியாகும்" என்றார்.

இக்கூட்டத்தில் திருவாளர்கள் மு. ஆலாலசுந்தரம், விஸ்வநாதன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (கு)

## வேலரும் மயிலரும்




வேலர்: கோயிலில் மந்திர ஒலியாயிருக்கு! என்ன விசேஷம்?

மயிலர்: வேட்பாளர் கட்டுக்காசு செலுத்துற நாள்... அதற்காக ஆயிரத்தெட்டு வில்வ அர்ச்சனை செய்விக்கிறார்.

வேலர்: ஆயிரத்தெட்டு வில்வ அர்ச்சனை கட்டுக்காசு ஆயிரத்தையாவது வெண்டுகொடுக்கும்.

—சுந்தர்

# சாவகச்சேரியில் இளைஞர் எழுச்சிவிழா

சாவகச்சேரி, திங்

சாவகச்சேரியில் வரலாறு கண்டிராத அளவுக்கு மக்கள் வெள்ளம் அலைமோத, சரித்திரமே இதுவரை கண்டிராத அளவுக்கு சாவகச்சேரி தமிழ் இளைஞர் பேரவையின் எழுச்சி மகாநாடு நடைபெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர், தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் கொடியேற்றி வைக்க ஆரம்பித்த இம்மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக, சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களின் சைக்கிள் ஊர்வலம் ஆரம்பமானது. திருவாளர்கள் மாவை சேனாதிராஜா, திசைவீரசிங்கம், வண்ணை ஆனந்தன், ஜீவராஜா ஆகியோர் தலைமையில் இந்த ஊர்வலம், உதய சூரியன் கொடிகளுடன் 'நாமில்லாத நாடில்லை' 'நமக்கென்றொரு நாடில்லை' 'வங்கக் கடலாகக் குமுறியெழும் சிங்கத் தமிழினத்திற்கென ஒரு தமிழ்ஈழம் மலரும்' என்ற கோஷங்களுடன் சுமார் 40 மைல் ஊர்வலம் ஒன்று சாவகச்சேரி சந்தை மைதானத்திலிருந்து புறப்பட்டு அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் அரங்கை வந்தடைந்தது.

இந்த இளைஞர் ஊர்வலத்தில் பெருந்தொகையான இளைஞர்கள் கிளிநொச்சியிலிருந்து, வேட்பாளர் திரு. வி. ஆனந்தசங்கரியின் தலைமையில் சைக்கிளில் வந்து கலந்து கொண்டது.

இந்த ஊர்வலத்திற்கு முன்னால் மலர்களினால் அலங்கரிக்கப்பட்ட உதய சூரியன் சின்னம உழவு இயந்திரம் ஒன்றில் வைத்து ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது. வீதிகள்தோறும் இருமருங்கிலும் மக்கள் வெள்ளம் திரண்டு நின்று உதய சூரியன் கொடியைக் காட்டி, 'வாழ்க கூட்டணி, மலர்க தமிழ் ஈழம் என்ற கோஷம் எழுப்பியது. மட்டுவில் மகா வித்தியாலய சந்தியில் பிரமாண்டமான சோடனைகளுடன், இளைஞர்கள் உதயசூரி

(6-ம் பக்கம் பார்க்க)

## இன்றிரவு கருணநிதி பேசுகிறார்

சென்னை, ஜூன் 5

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு.கருணநிதி நாளை இரவு 8-30 மணிக்கு வானொலியில் தேர்தல் பிரசார உரை நிகழ்த்துகிறார்.

சென்னை, திருச்சி அலைவரிசைகளில் இவ்வுரையை கேட்கலாம். (உ)

மாஜி தி. மு. க. அமைச்சர்கள் மீதான

# விசாரணை இறுதி அறிக்கை ஆகஸ்ட் முடிவுக்குள்!

### சர்க்காரியா அறிவிப்பு

சென்னை, ஜூன் 5

முன்னாள் தி.மு.க.முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி உட்பட அவரது அமைச்சரவையைச் சேர்ந்த சிலர் மீதான ஊழல் புகார் பற்றிய தமது விசாரணையின் இறுதி அறிக்கை ஆகஸ்ட்மாத இறுதிக்குள் மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுவிடும் என்று மாஜி சுப்ரீம் கோர்ட் நீதிபதி சர்க்காரியா அறிவித்துள்ளார்.

ஏற்கனவே இவர்கள் பற்றிய ஏழு புகார்கள் மீதான விசாரணை அறிக்கை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது என்றும் அவர் சொன்னார்.

தமது விசாரணைகள் ஜூன் 20-ம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் என்றும் அவர் கூறினார். (உ)

### மணிவாக்கு

நாம் விட்ட பிழைகளேயும், செய்த் குறைகளேயும் கண்டிக்கும் பேச்சை எப்போதும் கேட்கவேண்டும். ஒரு போதும் புகழ்ச்சியைக் கேட்கக்கூடாது.

—மகாத்மாகாந்தி

ஈழநாடு
THE EELANAADU

## ஏமாற்ருதே, ஏமாருதே!

இலங்கைக் குடியரசின் முதலாவது பொதுத் தேர்தலில் போட்டியிட முன் வந்துள்ள வேட்பாளர்கள் இன்று தமது வேட்பு மனுக்களேத் தாக்கல் செய்யவிருக்கின்றனர்.

இத்தேர்தலில் போட்டியிடப்போவதாக ஏற்கனவே அறிவித்திருந்த சிலர் தாம் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்து விட்டனர்.

தன்னம்பிக்கையில் தான் தனி மனிதன் வாழ்கின்ருன்; பிறரை நம்பி வாழக்கூடாது; தன்னே நம்பியே வாழவேண்டுமென்பதுதான் மனிதத் தத்துவமுங்கூட!

ஆனலும் மக்களுக்குச் சேவை செய்வதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு ஆட்சிமன்றத்திற்கு மக்களின் பிரதிநிதிகளாகச் செல்வதற்கு 'நான் நீ' என்று முண்டியடித்துப் போட்டியில் குதிப்பவர்களுக்குத் தன்னம்பிக்கை மட்டுமிருந்தால் போதாது மக்களின் நம்பிக்கையையும் அவர்கள் பெறவேண்டியது அவசியம். மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியா விட்டால் அவர்கள் தேர்தலுக்கு நிற்கவேண்டிய அவசியமேயில்லை.

இந்திய நாட்டுக்கே தங்கள் சொத்து, சுகமெல்லாவற்றையும் அர்ப்பணித்த நேரு குடும்பத்தின் வாரிசுகள், அந்தப் பரம்பரையின் பெயரைச் சொல்லி அரசியலில் பிழைக்கமுடியாது என்பதை இந்திய மக்கள் சமீபத்தில்தான் உணர்த்தி இருக்கிருர்கள்.

தேர்தல் காலத்தில் மட்டும் 'இந்நாட்டு மன்னர்களான' வாக்காளரிடம் பரம்பரையைச் சொல்லியும்; அறிவு ஆற்றல் பற்றியும் எடுத்துக்கூறி மக்களின் ஆதரவைப் பெறலாமென்ற காலம் மறைந்துவிட்டது.

மக்களுக்குத் தேவையான சகலவற்றையும் பெற்றுத் தருவோம். இந்த நாட்டில் சகல மக்களும் சம உரிமையுடன் தன்மானத்துடன் வாழ வழி செய்வோமென்று உறுதியளித்து பின் அந்த உறுதி மொழிகளேயே மறந்தவர்களேயும் மக்களுக்குத் தெரியும்.

எது எப்படியானலும் தேர்தல் என்ருல் ஏமாற்றுவதற்கும், ஏமாறுவதற்கும் நிச்சயம் நிறையச் சந்தர்ப்பம் இருக்கின்றதென்பது வேட்பாளர்களுக்கும் தெரியும்; வாக்காளருக்கும் தெரியும்!

ஆனலும் இரு தரப்பினரும் ஏமாற்றுகின்ருர்கள்; ஏமாற்றமடைகின்ருர்கள்!

இதுதானே ஜனநாயகம்!

ஜனநாயக சோஷலிஸமே தங்கள் கொள்கை என்று ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கூறுகின்றன.

இந்த இரண்டு கட்சிகள் மட்டுமல்ல, ஆட்சிபீடத்தில் அமர்வதற்கான போட்டியில் ஈடுபட்டுள்ள கட்சிகள் அனேத்துமே இப்பேர்ஜனநாயக சோஷலிஸமே தங்கள் கொள்கையென்று கூறிக்கொள்கின்றன.

ஜனநாயகமும் சோஷலிஸமும் இணைந்து போகமுடியுமா? கடந்த சில ஆண்டுகளில் கண்ட அனுபவம் முடியாதென்றே சொல்கிறது!

இந்தியாவில் நேரு கண்ட ஜனநாயக சோஷலிஸமும் வெற்றிபெற்றதா?

நமது நாட்டில் இந்தப் பொதுத் தேர்தலிலும் ஆட்சிபீடத்திற்கு வரப் போட்டியிடும் கட்சிகள் ஜனநாயக சோஷலிஸக் கொள்கையில் போட்டியிடுகின்றன!

வடக்குக் கிழக்கில் போட்டியிடும் கட்சிகள் தமிழ் ஈழக் கோரிக்கையை வைத்துப் போட்டியிடுகின்றன.

தமிழர் சுயாட்சிக் கழகமும் தமிழர் விடுதலேக் கூட்டணியும் இக்கொள்கையை முதலில் முன் வைத்தன என்ருலும் தேர்தல் சமயத்தில் திடீர்திடீரெனத் தோன்றும் கட்சிகளும் இதே பல்லவியைப் பாடத் தொடங்கியிருக்கின்றன; சுயேச்சை வேட்பாளர்கள் பலரும் இதே மந்திரத்தைச் செபிக்கத் தொடங்கியுள்ளனர்.

தெற்கே ஜனநாயக சோஷலிஸம்; வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் ஈழம்! மக்களுக்குச் சேவைசெய்வதும், மக்கள் சுய உரிமையுடன் சுதந்திரமாக வாழ வேண்டுமென்பதும்தானே இந்தக் கொள்கை, இலட்சியத்தின் நோக்கம்.

இதற்காக எத்தனே கட்சிகள்; எத்தனே வேட்பாளர்கள்!

சுயநலமில்லாமல் மக்களுக்குத் தொண்டாற்றப் போட்டிபோட்டுக்கொண்டு முன்வரும் அத்தனேபேரையும் மக்கள் ஆதரிக்கவேண்டாமா?

யார் யாரை ஏமாற்றுகிருர்கள் என்பது அடுத்த மாதம் தெரிந்துவிடும்.

## 'தர்ம'ரின் முதல் பிரசாரக்கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

மானிப்பாய் தொகுதியில் தமிழர்விடுதலேக் கூட்டணி சார்பில் போட்டியிடும் திரு. வி. தர்மலிங்கத்தின் முதலாவது பிரசாரக் கூட்டமும், சேவைநலம் பாராட்டுவிழாவும் இன்று மாலே குப்பிளான் சனசமூகநிலையத்துக்கு அருகாமையில் நடைபெறுகிறது.

சட்டத்தரணி திரு ந. வைரவநாதன் தலேமையில் நடைபெறும் இவ்விழாவில் திருவாளர்கள் மு. சிவசிதம்பரம், திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், வி. தர்மலிங்கம், கா. பொ. இரத்தினம், சி. கதிரவேற்பிள்ளே, வ. பொன்னம்பலம், பண்டிதர் வ. நடராஜன், மாவை சேனதிராஜா உட்படப்பலர் உரையாற்றுவர்'

விழா ஏற்பாடுகளே திரு. பொ. நடனசிகாமணி செய்துள்ளார். (இ)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். திருவண்ணே கன்று திட்டி ஸ்ரீ காளிகாதேவி ஆலய சங்காபிஷேகம் செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறது. (அ)

### நினைவாலய முன்றலில்

# உலகத் தமிழர் சார்பில் செல்வாவின் உருவச்சிலே

## கருணுநிதியுடன் ஆலோசனே

கொழும்பு, ஞாயிறு

யாழ். நகரில்தந்தை செல்வாவுக்கு அமைக்கப்படவிருக்கும் நினைவாலயத்தின் முன்பதாக அமரரின் உருவச் சிலேயொன்றும் உலகத்தமிழர்கள் சார்பில் அமைக்கப்படவிருக்கிறது லண்டனிலுள்ள ஈழவிடுதலே முன்னணி இச்சிலேயை இந்திய சிற்ப விற்பன்னர்களேக் கொண்டு நிறுவவுள்ளது,

இலங்கைவந்துள்ள லண்டன் ஈழவிடுதலே முன்னணிப்பிரமுகரும் ஈழவிடுதலே சஞ்சிகை ஆசிரியருமான திரு. வீரசிங்கம் இத்தகவலே வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் தெரிவித்தார்.

நினைவாலயத்தின் முன்பதாக சிலேயை நிறுவுவதற்கான அனுமதியை திரு. அமிர்தலிங்கத்திடம் பெற்றுள்ளதாகவும் இந்திய சிற்ப விற்பன்னர்களேக் கொண்டு இச்சிலேயை நிர்மாணிப்பது பற்றி கலேஞர் கருணுநிதியுடனும் தொடர்பு கொண்டுள்ளதாகவும் மீண்டும் அவருடன் நேரில் தொடர்பு கொள்ள இருப்பதாகவும் திரு. வீரசிங்கம் தெரிவித்தார். (ம-இ)

## வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணே வீரமாகாளி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது. 25 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் 15ந் திகதி இரவு வசந்தஉற்சவமும், 29ந்திகதிகாலே8மணிக்கு தேர்த்திருவிழாவும், 30ந்திகதி பகல் தீர்த்தஉற்சவமும் இடம் பெறும். (கா-இ)

ஃ ஃ ஃ

இணையாணன், திங்கள்

கோண்டாவில் வடக்கு அன்னுங்கை சிவபூதவராயசுவாமி கோவிலின் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 15-ம் திகதி புதன்கிழமை கொடியேற்றவைபவத்துடன் ஆரம்பமாகி 23-ம் திகதி தேர்த்திருவிழாவும், 24ந் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

## கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம், திங்கள்

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலே முதலாம் வகுப்புத் தொடக்கம் 5-ம் வகுப்புவரையான மாணவ மாணவிகள் நேற்றுக் கல்விச் சுற்றுலா மேற்கொண்டு யாழ்.குடா நாட்டின் முக்கிய இடங்களேயும் தொழிற்சாலேகளேயும் பார்வையிட்டனர். ஆசிரியர் திரு. செ. கந்தசாமி, ஆசிரியைகள் திருமதிகள் க.இராமலிங்கம், பா. சிவநேசன், இ.மூத்ததம்பி, க. குலேந்திரன், தியாகராஜா ஆகியோர் தலேமையில் மாணவர்கள் சுற்றுலா மேற்கொண்டனர். (அ)

## வேட்பாளர் சந்திப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். மாவட்ட முன்ளுள் விவசாயப்படை ஊழியர் சங்க வடபிரதேச அமைப்பாளர் திரு. விசுவநாதன் மேற்படி சங்க உறுப்பினர்களே தேர்தல் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் தினமான இன்று காலே ஐ. தே. கி. வட மாகாண மத்திய காரியாலயத்தில் வந்து கூடும்படி கேட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிசார்பில் வடபகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களேச் சந்தித்து உரையாடும் பொருட்டே இக்கூட்டம் நடைபெறுகிறது.

## பிரச்சாரக்கூட்டம்

நல்லூர், ஞாயிறு

நல்லூர்த்தொகுதி தமிழர் விடுதலேக்கூட்டணி வேட்பாளர் திரு. எம். சிவசிதம்பரத்தை ஆதரிக்கும் பிரசாரக்கூட்டமொன்று நாளே செவ்வாய்க்கிழமை மாலே கோண்டாவில் கிழக்கு அரசடி பிள்ளேயார் கோவிலடியில் நடைபெறும்.

## "எனது வெற்றி உடுப்பிட்டி வெற்றியில்தான் உள்ளது"

— மு. சிவசிதம்பரம்

யாழ்ப்பாணம், திங்கள்

"நல்லூர்த்தொகுதியில்கூட்டணி சார்பில் நான் வெற்றி பெறுவதில் ஏதாவது அர்த்தம் இருக்குமானல், உடுப்பிட்டித் தொகுதியில் திரு. இராஜலிங்கம் வெற்றிபெற வேண்டும்" என்று நல்லூர்த்தொகுதிகூட்டணி வேட்பாளர் திரு. மு. சிவசிதம்பரம் உடுப்பிட்டித் தொகுதி மக்களுக்கு விடுத்த கோரிக்கையில் கேட்டுள்ளார்.

"உடுப்பிட்டித் தொகுதியில் திரு. த. இராஜலிங்கத்தை அதிகப்பெரும்பான்மை வாக்குகளால் உடுப்பிட்டித்தொகுதி மக்கள் தெரிவு செய்வார்கள்" என்று தமது கோரிக்கையில் நம்பிக்கை தெரிவித்துள்ள திரு. மு. சிவசிதம்பரம்மேலும் தெரிவித்திருப்பதாவது:

"எனது அருமைஉடுப்பிட்டி நண்பர்களே, கடந்த இருபது ஆண்டுகளாக உங்களுடன் நெருங்கியதொடர்புகொண்ட ஒருதொண்டனுகபழகிவந்துள்ளேன். அந்த அடிப்படையில் திரு. இராஜலிங்கத்தை உடுப்பிட்டித்தொகுதியில் உங்கள் பூரணஆதரவுடன் வெற்றியீட்டச் செய்யும் வண்ணம்உங்கள் அனேவரையும்வேண்டுகிறேன்.

"தமிழர்விடுதலேக்கூட்டணி இன்று தமிழ்மக்களுடையஒரே அணி. அந்த அணி வெற்றி பெற்ருல்தான் நாம் எல்லோரும் விரும்பும் தமிழ்ஈழத்தைப் பெறமுடியும். இந்த அணியில் சாதி, மத பேதத்திற்கு இடமில்லே. இதனல் உடுப்பிட்டித் தொகுதியில் சிறுபான்மைத் தமிழ்நண்பராகிய திரு. இராசலிங்கத்தைநிறுத்தியுள்ளோம். இந்த முடிவு என்னுடைய பூரணசம்மதத்துடன் எடுத்த முடிவென்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். என்மேல் அளவற்ற அன்பு கொண்ட நண்பர்களே! இந்த அன்பின் மேல் ஆணையாக திரு. இராஜலிங்கத்தை ஆதரிக்குமாறு வேண்டுகிறேன். அதற்காக உழையுங்கள்"! என்று கேட்டுள்ளார். (கு)

### தமிழாசிரியர்களின்

## கூட்டணி ஆதரவுத்தீர்மானம் 'அமிரி'டம் கையளிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலேக் கூட்டணிக்குத் தமது பூரண ஆதரவைத் தெரிவிப்பது என்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் திருமலேத் தீர்மானம் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர் விடுதலேக் கூட்டணி செயலகத்தில் வைத்து செயலதிபர்களில் ஒருவரான திரு. அ. அமிர்தலிங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர்ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு ந. பாலசுப்பிரமணியம் நிர்வாகச் செயலாளர் திரு. அ. பொன்னம்பலம், நிதிச்செயலாளர் திரு.நா.நடராசா கல்விகலாச்சாரச் செயலாளர் திரு.ஆ.க. மாணிக்கம் யாழ். மாவட்டச் செயலாளர் திரு சி. சிவபாலசிங்கம் ஆகிய முக்கிய நிருவாகிகள் திரு.அ. அமிர்தலிங்கத்திடம் அத்தீர்மானத்தை கையளித்தனர். செயலதிபர்களில் ஒருவரான திரு. மு. சிவசிதம்பரம்திற்கும் தமும் இவரிடம் கையளிக்கப்பட்டது. தீர்மானத்தின் பிரதி திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்திடமும் கையளிக்கப்பட்டது.

சந்திப்பின்போது தொகுதி வாரியாக உள்ள ஆசிரியர் சங்க கிளேகள் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் பற்றி விசேடமாக உடுப்பிட்டித் தொகுதி தொடர்பாக எடுக்கவிருக்கும் நடவடிக்கைள்பற்றி கருத்துப்பரிமாறப் பட்டன: தகுந்த தருணத்தில்இலங்கைத் தமிழ் ஆசிரியசங்கம் எடுத்த துணிகரமான தீர்மான்த்திற்கு திரு. அ. அமிர்தலிங்கம் நன்றிதெரிவித்தார். (இ)

## லண்டன் பிரமுகர்கள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். தொகுதி தமிழர் விடுதலேக் கூட்டணி அபேட்சகர் சட்டத்தரணி வெற்றிவேலு யோகேஸ்வரனே ஆதரித்து தேர்தல் பிரசார வேலேகளில் ஈடுபடும்பொருட்டு லண்டனில் அவருடன் கல்வியயின்று தற்பொழுது நீதிபதிகளாகவும், டாக்டர்களாகவும் கடமையாற்றும் சுமார் 20 பேர் யாழ்ப்பாணத்திற்கு வர இருக்கிருர்கள். (கி)

## கட்டுப்பணம் செலுத்தினர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத் தொகுதியில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிடும் டாச்டர் ஏ. எல். ஏபிரகாமின் கட்டுபணத்தை காலஞ்சென்ற யாழ்ப்பாண மாநகரமேயர் துரையப்பாவின் மூத்தசகோதரன் திரு. செல்வராஜா துரையப்பா ஈச்சமோட்டை ஆதரவாளர்கள் சார்பில் நேற்றுமுன்தினம் செலுத்தினர். (கூ)

# தொழிலாளரைப் பொலிஸார் சுட்டதில் 8 பேர்மாண்டனர்!

புதுடில்லி, ஜூன் 5 மத்திய பிரதேசத்தில்தொழிலாள ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 8 பேர் பலியானுர்கள் என அறிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட தொழிற் சங்கத்தலைவரை விடுதலை செய்யுமாறு கோரி ஆர்ப்பாட்டம் செய்த தொழிலாளர்கள் பொலிசாரைத் தாக்கியபோது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனரென்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## ராஷ்டிரபதி தோதல்

பம்பாய், ஜூன் 5. ராஷ்டிரபதி தேர்தலுக்கு ஜனதா கட்சி ஒரு அபேட்சகரை நிறுத்துமென்று ஜனதா கட்சித்தலைவர் திரு. சந்திரசேகர் இங்கு நேற்றுமாலை நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள்கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

ஜனதா கட்சியின் அபேட்சகருக்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவு கோரப்படும் என்றும் காங்கிரஸ் ஆதரிக்க முன் வந்தால் அதனை நாம்வரவேற்போம் என்றும் கூறினர்.

• • •

## பாகிஸ்தான் கண்டனம்!

ராவல்பிண்டி, ஜூன், 5 மொஸாம்பிக்கில் ரொடீஷியத் துருப்புகள் ஊடுருவல்செய்திருக்கின்றன என்று பாகிஸ்தான் கண்டனம் தெவித்துள்ளது.

''மொஸாம்பிக்கில் நுழைந்து தாக்குதல்கள் நடத்தியது ஒரு அத்துமீறிய செயலாகும். இது சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை ஒரு தீர்க்கமான முடிவை மேற்கொள்ளவேண்டும்'' என்று பாகிஸ்தான் கோரியுள்ளது.

இதற்கிடையே மொஸாம்பிக்கில் கொரில்லாத்தளங்களை அழித்துவிட்டு ரொடீஷியத் துருப்புகள் திரும்பிவிட்டன என்று ரொடீஷியா அறிவித்த போதிலும், மொஸாம்பிக் நகரில் இவர்களின் நடமாட்டம் காணக்கூடியதாக இருந்தது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானில்

# அரசியல்நெருக்கடி தீரும் அறிகுறிகள்

ராவல்பிண்டி, ஜூன் 5 பாகிஸ்தானில் சிறைவாசம் அனுபவித்த எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு பாகிஸ்தான் பிரதமர்பூட்டோ மேற்கொண்ட இந்தநடவடிக்கையை எதிர்க் கட்சித் தலைவர்கள் வரவேற்றுள்ளனர்.

விடுதலைபெற்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் இன்று ஞாயிற்றுக் கிழமை இரவு பிரதமரைச் சந்திப்பார்கள்.

இதற்கிடையே, எதிர்க்கட்சித்தலைவர்களுக்கும் பிரதமருக்குமிடையே நடைபெற்று வரும் பேச்சு வார்த்தைகளில் நல்ல முன்னேற்றம் காணப்படுவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். கடுமையான சில சட்டங்களை அரசு தளர்த்தியுள்ளதன் மூலம் மக்களிடையே ஒரு மனமாற்றம் உருவாகியிருப்பதாகவும் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பிரதமர் எதிர்க்கட்சித் தலைவர்களிடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் இரண்டாது சுற்று நாளைநடக்கிறது.

# தந்தையை மீட்க

## ரூ. 2 லட்சம் நன்கொடை!

### சஞ்சய் கேட்டதாக சாட்சியம்

புதுடில்லி, ஜூன்5 மிசா கைதிஒருவரை விடுவிக்க இளைஞர் காங்கிரசுக்கு 2 லட்சம் ரூபா நன்கொடை தரவேண்டுமென சஞ்சய்காந்தி மிரட்டிய கதை இப்போது நீதிமன்றத்தில் அம்பலமாகிஉள்ளது!

உத்தர பிரதேசத்தில் தனது நிலத்தைப் பறித்ததாக பழைய முதலவர் நாராயணதத்திவாரி முதலானேர்மீது ரவீந்திரபிரகாஷ் என்ற விவசாயி மேட்டலியில் வழக்குத் தொடர்ந்திருப்பது தெரிந்ததே. இவ்வழக்கில் அவரின் மகன் ரவீந்திரபிரகாஷின் மகன் அவினுஸ்கந்த சாட்சியமளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

''எனது தந்தை மீசா கைதியாக்கப்பட்ட பின்பு அவரை விடுவிக்கவேண்டும் என்பதற்காக டில்லியில் உத்தரப்பிரதேசஅரசு விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்த அப்போதையமுதல்வர் நாராயணதத்திவாரியை பார்க்கப்போனேன்.

'ரவீந்திரபிரகாஷின்மகன் என நான் அறிமுகப்படுத்தப்பட்டபின்பு, திவாரி என்னை வேறோர் அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கே சஞ்சய்காந்தி உட்கார்ந்திருந்தார்.

'என்னுடு என் தாயும் சகோதரியும் குடும்பநண்பர் ஒருவரும் வந்திருந்தனர். ஆனல் நான்மட்டும் சஞ்சய்காந்தியைப் பார்க்க அனுமதிக்கப்பட்டேன்.

'என்னை சஞ்சய்காந்திக்கு அறிமுகப்படுத்தியபின், நீங்கள் இளைஞர்காங்கிரசுக்கு உதவுவீர்களா? என்று கேட்டார் சஞ்சய்காந்தி...

'என்னஉதவி என்றேன் நான். இளைஞர் காங்கிரசுக்கு இரண்டு லட்சம்ரூபா தருவீர்களா' என்று கேட்டார் சஞ்சய்காந்தி'.

இவ்வாறு அவர் சாட்சியமளித்தார். விசாரணை தொடருகிறது.

## ''இந்திரா, சஞ்சய்மீது நீதிவிசாரணை வேண்டும்''

### நம்பூதிரிபாட் கோருகின்றூர்

புதுடில்லி, ஜூன். 5 திருமதி இந்திராகாந்தி, அவரது மகன் சஞ்சய் காந்தி மீது நீதிமன்ற விசாரணை நடக்க வேண்டுமென்று திரு. நம்பூதிரிபாட் கோரியுள்ளார்.

மேற்குவங்காளத்தில் நேற்று நடைபெற்றகூட்டமொன்றில் இந்திய மார்க்ஸியகம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. நம்பூதிரிபாட் பேசுகையில்தான் மேற்கண்ட கோரிக்கையை ஜனதா அரசுக்குச் சமர்ப்பித்தார்.

அவர் மேலும் பேசுகையில், அவசரகாலச் சட்டத்தை இந்திராகாந்தி அரசு அமுலுக்குக் கொண்டுவந்த பின்னர் நாட்டில் பயங்கர ஆட்சி நடந்தது என்றும் அக்கால கட்டத்தில் மக்கள் பயங்கரகொடுமைகளுக்குள்ளாக்கப்பட்டார்கள் என்றும் இது சம்பந்தமாக முன்னுள் பிரதமர், அவர் மகன் ஆகிய இருவர் மீதும் நீதிமன்ற விசாரணை நடத்தவேண்டும் என்றும் இவ்விஷயத்தில் ஜனதா அரசு நிதானமான போக்கைக் கடைப்பிடிக்கக் கூடாதென்றும் கேட்டுக் கொண்டார்.

# வீடுஎரிந்து 11பேர் கருகி மாண்டனர்!

பட்னு, ஏப். 5 பீகார் மாநில பட்னு கிராமம் ஒன்றில் உள்ள வீடு ஒன்று தீ ன் வக் கப்பட்டதை அடுத்து அதனுள் தூங்கிக்கொண்டிருந்த 11பேர் தீயில் கருகி மாண்டனர் என்று அறிவிக்கப்பட்டது. தீக்குப் பலியானவர்களுள் பெண்களும் குழந்தைகளும் அடங்குவர். (இ)

## லண்டனில் செல்வா, ஜி.ஜி.

### இறுதி யாத்திரை திரைப்படம!

லண்டன், ஜூன் 5 'அமரர்கள்ஜி. ஜி. பொன்னம்பலம், தந்தை செல்வநாயகம் ஆகியோரது இறுதி யாத்திரைத் திரைப்படங்கள் லண்டன் மாநகரில் இப்பொழுது காட்டப்படுகின்றன'.

இத்தகவலை, யாழ். கோணன்தோட்டச் சந்தியில் நடைபெற்ற விடுதலைக் கூட்டணி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றிய எஸ். ரீ. ஆர். பிலிம்ஸ் அதிபர் திரு. சி. தியாகராசா தெரிவித்தார்.

இப்படம் விரைவில்இலங்கையில் காட்டப்படும் என்றும் அவர் கூறினர். (கெ)

## எம். ஜி ஆர். பற்றி திடுக்கிடும் புத்தகம்!

சென்னை, ஜூன் 5 'எம். ஜி. ஆரின் உள்ளும் புறமும்' என்ற பெயரில் எம். ஜி. ஆர் பற்றிய பல திடுக்கிடும் சம்பவங்களை உள்ளடக்கி கண்ணதாசன் எழுதிய புத்தகம் ஒரு ரூபாய்க்கு சென்னையில் அமோகமாக விற்பனையாகிக்கொண்டிருக்கிறது! (கி)

## தி. மு க. வில் சேர்ந்தனர்!

சென்னை, ஜூன். 5 வடசென்னை நாடாளுமன்றத்தொகுதியில் எம். ஜி. ஆர். மன்றங்கள் சில கலைக்கப்பட்டுள்ளன. இதனுல் அம்மன்றங்களைச் சேர்ந்த 100க்கு மேற்பட்ட தொண்டர்கள்,கலைஞர் முன்னிலையில், தி. மு. க. வில் சேர்ந்துள்ளார்கள்.

பாஷ்யம் நாயுடு தெரு கொள்கைத்தங்கம் எம். ஜி. ஆர் ரசிகர்மன்றம், எம். ஜி. ஆர். பொதுப்பணி மன்றம், வண்ணை மு. பாண்டியன் படிப்பகம், 42வது வட்டம், மக்கள் திலகம் எம். ஜி ஆர்.மன்றம், மாடன் லேன் 10-வது வட்டம் புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர். நற்பணி மன்றம்,6வதுவட்டம் எம். ஜி. ஆர். முத்தமிழ் மன்றம் 6வது வட்டம், எம். ஜி. ஆர். பொதுநலமன்றம் 6வது வட்டம், சீரும் சிறப்பும் எம் ஜி. ஆர். மன்றம், மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.மன்றம் ஆகியவையே கலைக்கப்பட்டனவாகும். (செ

மலையகத்தில் வன்முறை

## பிரதமருக்குத் தந்தி!

சென்னை, ஜூன். 5 ''இலங்கைத் தோட்டங்களில் வகுப்புவாத வெறியுனர்வின் காரணமாகதமிழ்ப்பாட்டாளிகள் மீது நடத்தப்படுகின்ற அத்துமீறல்களால் பாதிக்கப்பட்டுள்ளனரென்றும் இந்தியப்பிரதமர் தலையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிகிடைக்கச்செய்ய வேண்டுமென்றுகோரி இலங்கை குடிபெயர்ந்தோர் நலவுரிமைச் சங்கத்தலைவர் ஏ. எஸ் மணவைத்தம்பி பிரதமருக்குத் தந்தியனுப்பியிருக்கிறுர்.

மலையகத் துப்பாக்கிச்சூடு தொடர்பாக இத்தந்தி அனுப்பப்பட்டுள்ளது. (கி)

## ''ஹிந்தி திணிப்பு இல்லை''

### பிரதமர் மீண்டும் உறுதி

சென்னை, ஜூன் 5 ''ஹிந்திபேசாத மாநிலங்களில் ஹிந்தி மொழி திணிக்கப்படும் என்பது வீண்புரளி. இந்தப் பொய்ப்பிரச்சாரத்துக்கு மக்கள் ஏமாறக்கூடாது'' என்று இங்கு நடைபெற்றவைபவமொன்றில் பேசுகையில் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறினர்.

ஹிந்திபேசாத மாநிலங்களில் எக்காரணம் கொண்டும் ஹிந்தி மொழி அமுலுக்குக் கொண்டுவரப்பட மாட்டாது, பொய்ப்பிரசாரத்தினுல் நான் மிகவும் வேதனைப் படுகின்றேன் என்று கூறிய பிரதமர் மொரார்ஜி, ''தமிழ் புராதன மொழி. தேசிய ஒருமைப்பாட்டுக்கு தமிழ்மொழி உதவும்'' என்று தெரிவித்தார்.

# பொதுத்தேர்தலில் யாரை ஆதரிப்பது?

## தீண்டாமை ஒழிப்பு இயக்கம் கூடுகிறது

யாழ்ப்பாணம், திங்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் வடபகுதியில் எக்கட்சிக்கு ஆதரவு அளிப்பதெனத் தீர்மானிப்பதற்காக தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் நாளை யாழ்ப்பாணத்தில் கூடுகிறது. இதுதொடர்பாக தீண்டாமை ஒழிப்பு வெகுஜனஇயக்கத் தலைவர் திரு. எஸ். ரி. என். நாகரத்தினம் விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

'வடபகுதியில்தேர்தலில்போட்டிக்கு நிற்கும் சிலஅரசியல் கட்சிகளும், சுயேச்சை அபேட்சகர்களும், சிறுபான்மைத் தமிழர்சமூகத்தைச்சேர்ந்தஅபேட்சகர்களும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தைக் கூடிய தேர்தலில் ஆதரவு வழங்கும் படிகேட்டுள்ளனர் இவ்வேண்டுகோளைப்பற்றிப் பொதுச்சபை ஆராய்ந்துதேர்தல்பற்றிஇறுதியான முடிவை இத்தினத்தில் எடுக்கும்' (கா-தி)

## செல்லத்தம்புவுக்கு ஆதரவாக

### போட்டி வாபஸ்

மாங்குளம், ஞாயிறு முல்லைத்தீவுத் தொகுதியில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிடவிருந்த திரு. கந்தையாகிருஷ்ணபிள்ளை போட்டியிலிருந்து விலகிக் கொண்டார். இவர் ஒரு அரசாங்க உத்தியோகத்தராவார். மாந்தைகிழக்குப்பகுதி கிராமஅபிவிருத்தி அதிகாரியான இவர் தந்தை செல்வாவின் கொள்கைக்கு மதிப்பளித்துக் கூட்டணி வேட்பாளருக்கு ஆதரவு நல்கும் வகையில் தாம் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளார். (அ)

# 'தமிழீழம் வெறும்கோஷமா யதார்த்த பூர்வமானதா?'

''எவன்என்னைஎதிர்க்கிருனே அவனே எனக்கு நலன் புரிகிருன்'' என்ற வினேபாவின் கூற்றைத் தமிழன் என்று உணர்கிருனே அன்றே அவன் வாழத் தொடங்கினுன்.

முதலில் ஈழம் எமது தாயகம் என்ற உணர்வை நாம் பெறவேண்டும். இந்தியாவே எமது தாய்நாடு என்று சமீப காலம்வரை யாழ்ப்பாணத்து அறிஞரும் பேசிவந்தனர். இராமாயண காலத்துக்கு முன்பே ஈழத்தில் தமிழ்க்குடி வாழ்ந்துவருகின்றது. இங்கு வந்த விசயன் கோணேஸ்வரம், கேதீஸ்வரம் முதலிய கோவில்களைத் திருத்தினுன் என மகாவம்சம் கூறுகின்றது. எனவே இங்கு வாழ்ந்த மதம், இந்து மதம். வந்த மதமே புத்த மதம். ஈழத்தின் நாலாபக்கக் கடற்கரை தோறும் நிற்கும் காவல்தெய்வங்கள் இந்துத் தெய்வங்களே. அவையே ஈழத்தில் தோன்றிய கோவில்கள், விகாரைகள், தேவாலயங்கள், மசூதிகள் எல்லாவற்றுள்ளும் பழமையானவை.

வடகரையில் நகுலேஸ்வரமும், கீழ்க்கரையில் கோணேஸ்வரமும், மண்டூர்க் கந்தனும், தெற்கே கதிர்காமக்கந்தனும், மேற்கே முனீஸ்வரமும், திருக்கேதீஸ்வரமுமாக இந்நாடு இந்துத் தெய்வ ஆட்சிக்குட்பட்டுத் திகழ்கின்றது. இவை தவிரத் தென்னிலங்கையில் இந்துக் கோவில்கள் பல உள்ளன. அவை பௌத்தரும் சென்று வழிபடும் தலங்களாகவே விளங்கிவருகின்றன.

## மாவட்டங்களில்தான் தமிழ் பேசுவோர்

மேலும் 1972ம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி ஈழத்தின் குடிசனத் தொகை

### விவாத மேடை

12,711,143 ஆகும். இவருள் தமிழ்பேசுவோரின் (இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், இலங்கை முஸ்லீம்கள், இந்திய முஸ்லீம்கள்] தொகை 34,64,642 ஆகும். ஈழத்தின் 22 மாவட்டங்களில் பின்வரும் 6 மாவட்டங்களிலேயே தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்துவருகின்றனர். அவை யாழ்ப்பாணம், மன்னுர், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, நுவரெலியா என்பனவாகும். இந்த 6 மாவட்டங்களிலும் வாழும் தமிழ் பேசுவோர்தொகை 13,89,534 ஆகும். மிகுதியாயுள்ள 20,75,108 தமிழ் பேசுவோர் ஏனைய 16 மாவட்டங்களிலும் வாழ்ந்துவருகின்றனர். தமிழ் மாவட்டங்களாகிய இந்த 6 மாவட்டங்களிலும் வாழும் சிங்கள மக்களின் தொகை 3,72,605 ஆகும்.

இந்தப்புள்ளி விவரத்தின்படி 6 மாவட்டங்களே தமிழ் மாவட்டங்கள் என்பதும் தமிழ் பேசுவோரில் பெரும் பகுதியினர் சிங்கள மாவட்டங்களில் வாழ்ந்துவருகின்றனரென்பதும் தெளிவாகின்றது.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க விரும்பாத தமிழ் மக்கள் ஈழக் கடற்கரை தோறும் வீற்றிருக்கும் தேவ கோட்டங்களைச் சூழ்ந்து பெருந் தொகையினராக வாழ்ந்திருப்பரென்பது துணிபு. எனவே ஒருகாலத்து அவ்விடங்கள் எல்லாம் தமிழ்ப்பிரதேசங்கள் என்பதில் ஐயம் இல்லை. இன்றும் 35 லட்சம் தமிழ் பேசுவோரில் 15 லட்சம் தமிழரே 6 மாவட்டங்களில் பெருந் தொகையினராக வாழ்ந்துவருகின்றனர். மீதமுள்ள 20 லட்சம் மக்களும் ஏனைய 16 மாவட்டங்களிலும் பரந்து வாழ்ந்துவருகின்றனர். நாடு பிரிக்கப்பட்டால் பெருந் தொகையினராக அங்கு வாழும் தமிழ்மக்களின் நிலை என்ன என ஒரு கூட்டத்தில் இளைஞர்களால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றினுக்குக் கூட்டணித் தலைவர் ஒருவர் பாகிஸ்தான் பிரிந்தபோது முஸ்லீம்களுக்கு ஏற்பட்ட நிலையினை ஒப்பிட்டுப் பதிலிறுத்தார். பாகிஸ்தான் பிரிந்த போது சில முஸ்லீம்கள் பாகிஸ்தானுக்குக் குடிபெயர்ந்தனர். பெரும்பான்மையோர் இந்தியாவைத் தாயகமாக ஏற்றுக்கொண்டனர். இங்கும் அந்நிலை ஏற்படும் என்பது கூட்டணித் தலைவர் கருத்து. இங்குள்ள தமிழர் சிங்கள நாட்டைத் தாயகமாக ஏற்க முன்வந்தாலும் இன்றுள்ள நிலையில் சிங்களவர் அவர்களை ஏற்பார்களா என்பதே கேள்வி. முஸ்லீம்களை ஏற்றுக்கொண்ட இந்தியர்களோடு சிங்களவர்களை ஒப்பிடலாமா? காந்தி, நேரு, காமராஜ் போன்ற தலைவர்கள் அங்கு இருக்கிருர்களா? சமயச் சார்பற்ற ஆட்சியை அமைக்கவும் ஒரு முஸ்லீமை ஜனுதிபதியாக ஏற்கவும் இடம் கொடுக்கும் இந்துப் பண்பாட்டினை இந்த நாட்டில் கனவுகூடக் காண முடியாதே.

நாட்டுப் பிரிவினை அமைதியாக நடந்தால் அங்கு வாழும் 20 லட்சம் தமிழ் பேசுவோரை நாமெடுத்துக்கொண்டு இங்கு வாழும் 4 லட்சம்சிங்களமக்களை அங்கு கொடுத்துப் பரிவர்த்தனை செய்துகொள்ளவேண்டும். தம்மைப் பற்றிப் பெருமிதப்படும் ஈழத் தமிழர் (சிறப்பாக யாழ்ப்பாணத் தமிழர்) 14 லட்சமே என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இவ்வுண்மைகளை எல்லாம் தனித் தமிழ் நாட்டுக் கோரிக்கையாளர் சிந்தனைக்கெடுத்ததாகத் தெரியவில்லை. தனிநாட்டுக் கோரிக்கை ஓர் அரசியல் கோஷமா? யதார்த்த பூர்வமான கோரிக்கையா?

அன்பர் அமிர்தலிங்கத்துக்கும் காசி ஆனந்தன் போன்ற குறிப்பிடப்பிடத்தக்க சில இளைஞர்களுக்கும் தவிர ஏனையோருக்குத் தனிநாடு ஒரு கோஷமே என்பது என் அபிப்பிராயம்.

இழந்த லெமூரியாக்கண்டத்தின் எஞ்சிய பகுதியாகிய ஈழம் முழுவதும் வாழ்ந்த் தமிழினம் தன்னைத்தானே அழித்துக்கொண்டு வடக்கு கிழக்கு மாகாணங்களிற்கூட வாழத் தகுதியற்ற இனமாகிவிட்டதையே வரலாறு காட்டுகிறது. இதற்குற்காரணமான அளவு கடந்த தன்னலத்தையும் அதன் விளைவுகளையும் எண்ணிப் பார்க்க வேண்டும். உழைக்கும் வர்க்கம் முன் செல்ல ஏனையோர் பின்செல்ல வேண்டுமென்ற வள்ளுவ அரசியலைப்புறக்கணித்து உழைப்பானரை இழிசனராக்கிய சாதிப்பிரிவும் சீதனக்கொடுமையால் வளர்ந்த முதிர்கன்னிப்பிரச்சனையும் தமிழர் புறமதம் புகவும் அழியவும் ஏதுக்களாயின.

இராமநாதனுக்கும் அருணுசலத்துக்கும் பின்வந்த சட்டம் படித்த அரசியல் தலைமை சமுதாயப்பார்வைக் குறைவினுல் எல்லாவற்றையும் சட்டரீதியிலேயே சிந்தித்து வந்துள்ளது. தமிழர் உரிமைப் போராட்டங்கள் போராட்ட முறை தெரியாத காரணத்தால் தமிழர் அறப் போராட்டங்களாகவேமாறின தமிழ் இனத்தின் பலவீனங்களை வெளிக்காட்டும் போராட்டங்களாகவே நடந்தேறின. தமிழ் மொழி உரிமையா, பிரிவுக்கவுன்சிலுக்குப் போவோம் சாதிப்பிரச்னையா வா, கோட்டடிக்கு. சட்டமறுப்புப் போராட்டமா ட்ரயல் அட் பாரில் வழக்கு.

இந்தச் சாதனைகளில் இருந்து சிங்கள இனமும் தமிழினமும் வெவ்வேறு இனங்களாக இருக்கும் காரணத்தால் பிரிய வேண்டியதில்லை என்பது புலனுகிறது. நமக்குள் தீராத பகைமூட்டப்பட்ட காரணத்தால் நாம் பிரிவினைக்குத் தள்ளப்படடோம் என்பதே உண்மையாகும்.

இரண்டாவதாகக் கூறப்படும் காரணம் பதவிக்குவந்த அரசுகளோடு ஒப்பந்தங்கள் செய்தோம் பயனில்லை என்பது பண்டாரநாயக்காவுடன் வெளிப்படையாகச் செய்யப்பட்ட ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. டட்லியுடன் செய்யப்பட்ட இரகசிய ஒப்பந்தமும் ஏமாற்றத்தில் முடிந்தது.

பண்டாரநாயக்காவையும் டட்லியையும் நம்பினேம். ஏமாந்தோம், எனவே இனிச் சிங்களவரை நம்பிப்பயனில்லை என ஒருமுறை அமரர் செல்வநாயகம் கூறினுர். தனிநாட்டுக் கோரிக்கைக்கு இதனை ஆதாரமாக்கினுர் இந்த விவாதத்திலுள்ள ஓட்டையை விவரிக்க இங்கு இடமில்லை.

இந்த நாட்டுக்கு மிகப் பொருத்தமானது கூட்டாட்சியே என ராஜாஜியும் ஒருமுறை கல்கியில் எழுதினுர். அந்தக்கோரிக்கை ஏன் நிறைவேறவில்லை. கூடிவாழ விரும்புகிறவன், மற்றவனைக்குறை கூறிக்கொண்டேயிருந்தால் கூட்டுவாழ்க்கை சாத்தியப்படுமா? ஒரு கட்சியின் தோற்றமும், வளர்ச்சியும் வாழ்வும், பேச்சும் மூச்சுமெல்லாம் வகுப்புவாதமாகவே இருந்

**க. ந. வேலன்**

தால் எப்படிக் கூடிவாழ முடியும்.

எனவேதான் புதிய காற்று வடக்கில் இருந்து வீசவேண்டுமென்கின்ரேம். அதுதென்னிலங்கைத் தென்றலைத் தழுவவேண்டுமென்கின்ரேம்.

இன்று தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் கொள்கைகள் தியாகங்கள் எல்லாம் ஒதுங்கிக் கொண்டன. தமிழினம் போலிகளை இனங்காணத்தொடங்கி விட்டது. கட்சிக்கப்பாலே தனிமனித யோக்கியத்தைச் சிந்திக்கத் தொடங்கிவிட்டது. அந்தச் சிந்தனைதேர்தலில்பிரதிபலிக்கத்தான்போகிறது.

ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்குமுன் பொதுவுடைமைவாதிகளும் தமிழரசுவாதிகளும் இணையும் வாய்ப்பைக் கணுக்கண்டவன் நான். அமரர் செல்வநாயகத்துக்கும் அன்பர் அமிர்தலிங்கத்துக்கும் கடிதம்எழுதி பொதுவுடைமைப் பாராளுமன்றப் பிரதிநிதியாகப் பின்னர் இருந்த அமரர் கந்தையாவுடன் பேச்சு வார்த்தை நடத்த ஒழுங்கு செய்தேன். இருகட்சியினரும் சோஷலிசத்தையும்கூட்டாட்சியையும் ஒப்புக்கொண்டிருப்பதால் இருதரப்பினரும் இணைவதில் சிரமமிருக்காதென்றே முயன்றேன். மாலை நான்கு மணிக்குத் தொடங்கிய பேச்சு வார்த்தை இரவு 12 மணி வரை மானிப்பாய் இந்துக்கல்லூரி முன்னுள் அதிபர் முத்துவேற்பிள்ளை வீட்டில் நீண்டு சென்றது, ஆனுல் பயனின்றிக் கழிந்தது. இன்று இருதரப்பினருக்கும் தலைமயிர் நரைத்த பின்பாவது இணையும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதே.

இன்று தமிழ்மக்களிற் பெரும்பாலோர், தமிழர் கூட்டணி தமிழினத்தின் விடுதலையைப் பெற்றுத்தருமென்று நம்புகின்றனர். ஒருகாலத்தில் தமிழ்க்காங்கிரஸை நம்பினர். அதற்குநூறுவீத பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் வழங்கினர். அதன்பின்னர் தமிழரசுக்கட்சியை நம்பி அதற்கும் நூறுவீத ஆதரவு அளித்தனர். இன்றும் தமிழர் கூட்டணியை நம்பி நூறுவீத பிரதிநிதித்துவம் வழங்கக்கூடும். ஆனுல் இனிமேலாவது தமிழினத்தின் உரிமைகளை இவர்கள் பெற்றுக் கொடுப்பார்களா என்பதே கேள்வி.

காந்தியின் வாரிசுகளான வினேபாபாவே, ஜெயப்பிரகாஷ்,கிருபளானி, தேசாய் போன்றவர்களோடுநமது தலைவர்களுக்குத் தொடர்பில்லை. அவர்கள் கதைப்பதெல்லாம் கருணுநிதிபோன்றவர்களுடன் தான். அவர்கள் நிழற்படமெடுத்ததெல்லாம் தென்இந்திய சினிமா நடிகர்களுடன் தான். காந்தியக்காற்று ஒரு காலத்தில் ஈழத்திலே வீசிய துண்டு. இன்று வீசுவது திருவாரூர்க்காற்றுத்தான். அதன் விளைவுகளையே நாம் அனுபவித்துவருகின்ரேம்.

அண்மையில் சென்னைக்கு வந்த ஆசார்யகிருபளானி,சத்தியாக்கிரகம் என்ருல் சட்டத்தையே மீறுவதாகப் பலர் எண்ணுகிருர்கள். அந்தக் கருத்துத் தவறு. சத்தியாக்கிரகம் என்பது சட்டத்தை நிறைவுபடுத்துவதாகும் என்று கூறினுர். தொடர்ந்து ஒரு விளக்கத்தையும் அவரே கூறினுர்.

சட்டத்தை மீறுகிறவன் அதற்காக விதிக்கப்பட்ட தண்டனையிலிருந்தும் தப்பிக்கப் பார்க்கிருன். ஆனுல் சத்தியாக்கிரகி அப்படியல்ல. சட்டத்தை மீறுவதால் கிடைக்கப் போகும் தண்டனைஎன்ன என்பதை முன்னமேஅறிந்துஅதனை எதிர்பார்த்து அனுபவிக்கவும் தயாராகிவிடுகின்ருன். எனவே தான் சத்தியாக்கிரகி சட்டத்தை மீறுபவன்அல்ல. சட்டத்தை நிறைவுபடுத்துபவனுகின்ருன். இந்தவிளக்கம் என்னுடையதல்ல. காந்தியடிகள் கூறியதுதான் என்று கூறியுள்ளார்.

எனவே இவைகளின் கடந்த கால அரசியல் தலைமையின் விளைவுகளைச் சுருக்கமாகச் சொன்னுல்,

(1) தமிழர்-சிங்களவர்உறவு பாதிக்கப்பட்டுப் பகை வளர்ந்திருக்கிறது.

(2) தமிழரின் இருந்த உரிமைகளும் இழக்கப்பட்டிருக்கின்றன.

(3) தமிழினத்தில் பிற்போக்குச் சக்திகள் தலைதூக்கியுள்ளன.

## ''ஒற்றுமை நிலைக்க வேண்டும்''

யாழ்ப்பாணம், திங்கள்

''நாம் அடிமை வாழ்விலிருந்து விடுபட தமிழ் ஈழத்தை அமைப்பதே சரியான முடிவென்பதை கடந்த 72-ம் ஆண்டு தந்தை செல்வர் வெளிப்படுத்தினுர். அவருடைய கொள்கைப்படி இதை எவ்வழியில் பெறலாமென கொள்கை விளக்கம் கொடுப்பதே நாம் தந்தைக்கு செய்யும் அஞ்சலியாகும்.'' என்று அனலை ஊராட்சிமன்ற உப தலைவர் திரு. வே. மயில்வாகனம் செல்வா அஞ்சலிக்கூட்டத்தில் பேசுகையில் கூறினுர். இக்கூட்டம் அனலைதீவு பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் செ.சிவரெத்தினம் தலைமையில் நடைபெற்றது.

திரு. வே. மயில்வாகனம் தொடர்ந்து பேசுகையில், நாம் தந்தைக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிகளில் அரசியல் பேசுவது கூடாதென்கிருர்கள். தந்தை அரசியல் அறத்தை போதித்தார். அந்த அரசியல் அறத்தை-தூய்மையை நாம் பேணுவதே தந்தைக்கு செய்யும் அஞ்சலியாகும். தந்தையின் வழியில் நம்மை மேம்படுத்தி அரசியலில் விடுதலைபெறுவோம் என்ருர்.

அனலைதீவு த. வி. கூ. உபசெயலாளர் திரு தயாபரராசா வரவேற்புரை நிகழ்த்துகையில் ''மூவேந்தர்களால் ஒற்றுமைப்படுத்த முடியாத தமிழினத்தை நமது மூன்று தலைவர்களும் ஓரணியில் கொணர்ந்தார்கள். இந்த ஒற்றுமையை நிலைக்கச்செய்வதே தந்தை செல்வாவுக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்'' என்ருர்.

கூட்டத்தில் பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு. ஐ. நடராசா, திரு. ச. பத்மநாதன், திரு.க. இளையதம்பி, திரு. எஸ்.கே. மகேந்திரன், திரு. க.சிவனடியான் உட்படபலர் உரையாற்றினர்.(கெ)

## ஓலைப்பெட்டி யாருடையது?

யாழ்ப்பாணம், திங்கள்

சென்ற வெள்ளிக்கிழமை கொடிகாமத்திலிருந்து கிரிமலைக்கு யாழ்ப்பாணம் ஊடாக வந்த பஸ்ஸில், சிறிய வண்ண ஓலைப்பெட்டி சில பொருட்களுடன் ஆசிரியர் ஐ.கணேஷ் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## ''நமது ஒற்றுமையை உலகறியச் செய்வோம்''

யாழ்ப்பாணம், திங்கள்

''எழுவைதீவு மக்கள் இன்றைய கிராமிய மக்களில் அதிகம்படித்தவர்கள் அவர்களுக்கு விடுதலை உணர்வுபற்றி யாரும் கூறத் தேவையில்லை. இத்தேர்தலை அவர்கள் சரியான முறையில் பயன்படுத்துவார்கள்'' என்று எழுவைதீவு ஊராட்சி மன்ற திறந்தவெளியில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி கருத்தரங்கில் இளைப்பாறிய ஆசிரியர் திரு. வே. மனுவற்பிள்ளை பேசுகையில் கூறினுர். இக்கருத்தரங்குக்கு பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் தலைமைதாங்கினுர்.

திரு. வே. மனுவற்பிள்ளை தொடர்ந்து பேசுகையில்''தமிழினம் இக்கட்டான நிலையில் இருக்கிறதென்பதைஉலகறியச் செய்து ஒற்றுமையை ஏற்படுத்தி தமிழர்களை ஒருகொடியின்கீழ் கொண்டு வந்தார்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கூட்டணி வேட்பாளர்களுக்குஇத்தேர்தலில் முழுஆதரவையும் அளித்து இன ஒற்றுமையை உலகறியச் செய்வோம். நமக்குக் கிடைத்த இத்தருணத்தை விடுதலைக்காகபயன் படுத்துவோம்''என்ருர்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில், கருத்தரங்குகள் வைத்து பேசுவதுடன் நின்றுவிடாமல் எமது இயக்கம் விடுதலை உணர்வுடன் போட்டியிடுகின்றதென்பதை ஒவ்வொரு இல்லங்களுக்கும் சென்று விளக்கவேண்டும். தேர்தல் முடியும்வரை கொள்கை விளக்கம்கொடுத்து தேர்தல் முடிந்ததும் புனிதமான தமிழ் ஈழத்தை நிறுவ போராட எம்மை தயார் செய்யவேண்டும். விடுதலை பெற சிந்தித்தால் போதாது. செயல்படவும் வேண்டும் ''என்ருர்.

இதைத்தொடர்ந்து தமிழ் இளைஞர்பேரவை விடுதலைக் கூட்டணி கிளைகள் அமைக்கப்பட்டன. தேர்தல் காரியாலயம் ஒன்றும் திறக்கப்பட்டது. — — (கெ)

## இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

14-ம் வட்டாரத்தில் குருநாத சுவாமிகள் கோவிலுக்கு முன்பாக முன்னுள் மேயர் திரு. என். டீ. செல்லத்துரை தலைமையில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் பொதுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

**சாந்தி சினிமா** யாழ். நகர் போன்; 7642
தினசரி 4 காட்சிகள் 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி - தேவிகா- பாலாஜி
நடித்த
**அன்புக்கரங்கள்**

**வெலிங்டன்** [யாழ். நகர்]
ரஞ்சன் நடித்த
தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்
**நீலமலைத்திருடன்**

**லிடோ** போன்: 7693. (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி — சாவித்திரி
நடித்த
**வடிவுக்கு வளைகாப்பு**

**REGAL** (JAFFNA)
Daily: 4-45, 7-00 & 9-30 p. m.
**YOU ONLY LIVE ONCE**
(color)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — சாவித்திரி
நடித்த
**கப்பலோட்டிய தமிழன்**
10-6-77 முதல் சிவாஜி கணேசனின் **வைர நெஞ்சம்**

**RIO** (Jaffna) Daily 4 Shows
**STOP, LOOK & LAUGH**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 கட்சிகள்
சிவாஜி கணேசன், (இருவேடங்களில்)
உஷா நந்தினி, சௌகார் ஜானகி
**மனிதனும் தெய்வமாகலாம்**
(ஈஸ்ட்மன் கலர்)

கடைசி வாரம்
**மனோகரா** (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் • ராதாசலூஜா
வீரப்பா • நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
**இதயக்கனி**
(ஈஸ்ட்மன்கலர்)

**ராணி** (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
**நாளை நமதே**
(ஈஸ்ட்மன் கலர்)

"திருவருள்" புரியும் பக்திரசமான 5-வது வாரம்
**ராஜா** (யாழ்நகர்) போன்: 7180
தினசரி 4 காட்சிகள்
ஏ.வி.எம்.ராஜன், கிருபானந்தவாரியார்
நாகேஷ், சுந்தரராஜன், நடித்த
தேவரின் **திருவருள்** (ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு: பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்துகொள்ளலாம்.


# கூட்டணி வேட்பாளருக்கு சட்ட ஆலோசகர்கள்

யாழ்ப்பாணம், திங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களுக்கு நியமனத் தினத்தன்று வேட்புமனுக்கள் தாக்கல்செய்யும் செயலகங்களில் சட்ட ஆலோசனைகள் வழங்க பலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை செயலகத்தில் சட்டத்தரணி திரு.சி.சம்பந்தரும், அம்பாறை செயலகத்தில் சட்டத்தரணி திரு. உருத்திரமூர்த்தியும், மட்டக்களப்பு செயலகத்திற்கு சட்டத்தரணி திரு. நீலன் திருச்செல்வம்,' திரு. சாம். தம்பிமுத்துவும், புத்தளம் செயலகத்திற்குசட்டத்தரணி திரு.விவேகானந்தன், யாழ்ப்பாணத்தில் வேட்பாளர்கள் பலர் சட்டத்தரணிகளாக இருப்பதால் திரு அ.அமிர்தலிங்கமும், வவுனியா செயலகத்திற்கு சட்டத்தரணி திரு. ரி. சிவசிதம்பரமும், மன்னார் செயலகத்திற்கு சட்டத்தரணி திரு. கந்தசாமியும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேலதிக உதவிகளுக்கு சகல பகுதிகளுக்கும்சட்டத்தரணி திரு.செ. சந்திரகாசன் தலைமையில் ஓர் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. (கெ)

## ஜூசைதாசன் யாழ். வந்தார்

யாழ்ப்பாணம், திங்கள் மன்னார் விடுதலைக்கூட்டணி வேட்பாளர் திரு. ஜூசைதாசன் யாழ்ப்பாணம் வந்தார்.

தந்தைசெல்வாவின் சமாதிக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய பின்பு கூட்டணித் தலைமைக்காரியாலயத்தில் அபேட்சகர் உறுதிமொழிப்பத்திரத்தில் கையெழுத்திட்டு கூட்டணியின் அபேட்சைமனுவை ஏற்றுக்கொண்டார். (கி-அ)

## பிரசாரக் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள் ஊர்காவற்றுறைத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளருக்கான தேர்தல் பிரச்சாரக்கூட்டங்கள், 6ந் திகதி சரவணையிலும், 7ந் திகதி வேலணையிலும், 8ந்திகதிநயினாதீவிலும் நடைபெறும்.

## நாளை நடக்கும் கூட்டம்

பண்டத்தரிப்பு,ஞாயிறு வட்டுக்கோட்டை தொகுதி கூட்டணி வேட்பாளர் திரு. தா.திருநாவுக்கரசுவின் பிரசாரக்கூட்டம் செவ்வாய்க்கிழமை மாலை சில்லாலையில் நடைபெறும். வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களும், கூட்டணி வேட்பாளர்களும்,சிறைமீண்ட இளைஞர்களும் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.


**வெஸ்லி** [மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
A. V. M. ராஜன் – லக்ஷ்மி
**அகத்தியர்**

**புலோலி சினிமாஸ்** (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30
ஜெமினி — சரோஜாதேவி
**பணமா பாசமா**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
விஜயகுமார்-சுஜாதா
**அவள் ஒரு தொடர்கதை**


## 300 ரூபா அபராதம்

யாழ்ப்பாணம் திங். கட்டுப்பாட்டு விலையை மீறி மாட்டிறைச்சி விற்றவருக்கு கோட்டில் அபராதம் விதிக்கப்பட்டது. நெல்லியடியைச் சேர்ந்த முருகன் ராசன் என்பவர் 3 ரூபாவாக விற்க வேண்டிய ஒரு றாத்தல் மாட்டிறைச்சியை 3 ரூபா 50சதமாக விற்றதாக விலைக்கட்டுப்பாட்டதிகாரி திரு. என்,சண்முகத்தினால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் தொடரப்பட்ட இவ்வழக்கில் எதிரிக்கு 300 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (அ)

## பண்ணிசைவகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், திங்கள் தென்மராட்சியில்இசைமணி ஸ்ரீமதி பூமணி இராசரத்தினத்தின் தலைமையில், விசேட பண்ணிசை வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நல்லை ஞான சம்பந்தர்ஆதீனப் பண்ணிசை, மாமணிப் பட்டப் பரீட்சைமற்றும் விவேகானந்தசபை, சைவ பரிபாலனசபை ஆகியவற்றின் பண்ணிசைப்போட்டிகளுக்கும் ஏற்றவாறு சிறந்த பாடத்திட்டத்துடன் இப் பண்ணிசை வகுப்பை நல்லைஞானசம்பந்தர் ஆதீனப் பண்ணிசைப் புலவர் திரு. எஸ். ஆர். திருஞானசம்பந்தன் நடாத்திவருகிறார். (கா)


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

எட்டாம்வகுப்பு புதிய கணிதப்பயிற்சி இரண்டாம் பதிப்பு வெளிவந்துவிட்டது. 21 அலகுகளுக்கு பல்தேர்வு விடைவிடை விலை 4-75 ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 6378

உங்கள் விசேஷ தேவைகளுக்கும் நித்திய உபயோகத்துக்கும் நல்லதிறம் பூனூல்கள் தொகையாக, சில்லறையாகப் பெறலாம். P. B P. குருக்கள், ஓடைலேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 6376

### தேவை

வெக்சோல் வைவென் (நீட்டு மொடல்) கிராங்செட் (Crank) தேவை. விபரங்களுக்கு: K. ஆதித்தன், 165/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 6368

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் 3 அல்லது 4 பரப்பு காணி/ வீட்டுடன் காணி உடனடிக் கொள்வனவிற்குத் தேவைப்படுகிறது. விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 6359 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 6359

### வாடகைக்கு

மானிப்பாய் வெஸ்லி தியேட்டருக்கு முன்னுள்ள தேநீர்கடை சகல வசதிகளுடன் வாடகைக்குண்டு. விபரங்களுக்கு:- பொ. சின்னத்துரை, சந்தையடி, மானிப்பாய். 6379

### பயிற்சி

வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயறிங் ரேடியோ (Transistor) PMG Certificate வகுப்புகள். கல்வி இலாகாவினால் தொழிற்பயிற்சி நிலையமென அத்தாட்சிபெற்ற இலங்கையின் ஒரே தனியார்துறை நிலையம் இதுவே. O/L, A/L, GAQ B.A. ஆங்கில வகுப்புகள் ஆங்கில (சிறப்பு) பட்டதாரியினால் நடாத்தப்படும். National Institute of Engineering Technology. மயிற் மண்டபம் 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6365


## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு: 15041

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோவில் ரோட்
1. கந்தையா பரமநாதனும் பெண்
2. மிருளாயினி தேவியும்.

வழக்காளிகள்

எதிராக
நெட்டிலிப்பாய் கோண்டாவில்
1. கந்தையா நாகலிங்கமும் பெண்
2. சரஸ்வதியும்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு 15041-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1977-ம் வருஷம் (21-6-77) ஆனிமாதம் 21-ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 2257/50-ம் மேலும் ரூபாய்1500/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும் வழக்கு அணைத்த திகதியாகிய 1975-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 22-ம் திகதியிலிருந்து தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபாய் 448/20.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று கோண்டாவில் இறை "கம்பிலாப்புலம்" பர.நில. இலா.4 இதில் மேற்குப்பக்கமாக பர. நி. இலா. 3. நீக்கி மிகுதி பர. நில. இலா. 1. புதிதாகக் கட்டப்படும் கல்வீடும் கிழக்கேயிருக்கும் கிணற்றில் தண்ணீர் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும். இந்தப் பரப்பு ஒன்றுக்கு எல்லை கிழக்கு கந்தையா சின்னராசாவின் ஆதனம். வடக்கு சின்னத்துரை பெண் அன்னம்மாவின் ஆதனம். மேற்கு துரைராசா பெண் இந்திராதேவியின் ஆதனம். தெற்கு கனகசபாபதி பெண் பூபதியினுதனமும் பாதை முகப்பும் இதடங்கலும்.

நா. ஸ்ரீரங்கநாதன்,
விற்பனை ஆணையாளர்.

6, கன்னாதிட்டி ரோட்,
யாழ்ப்பாணம்.
5-5-77.

6380

ஈழநாடு
The EELANADU

# தமிழ்ஈழம் அமைத்தே தீருவோம் என்கிறார் அமிர்!

சங்கானை, ஞாயிறு

''எமது நியாயபூர்வமான கோரிக்கைகளை பொதுவுடமை வாதிகளும் உணர்ந்து கொண்டுள்ளனர். எமது இலட்சியம் வெற்றிபெறுவதற்கு அவர்களது உதவியும், ஒத்துழைப்பும் இருக்கும்'' என்று தமிழர் விடுதலைக்கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் சண்டிலிப்பாய் தொட்டிலடியில் திறக்கப்பட்ட மானிப்பாய் தொகுதிக்கான தமிழர் விடுதலைக்கூட்டணி அலுவலகத் திறப்பு விழாவில் பேசுகையில் கூறினார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில், ''தமிழர் ஐக்கியத்தின் சின்னமாக கூட்டணி திகழ்கிறது. சர்வதேச அரங்கிலும் நமது போராட்டத்திற்கு ஆதரவுபெருகிவருகிறது.

அடுத்த ஆட்சிமன்ற காலம் முடிவதற்குள் தமிழ் ஈழம் எப்படியும் அமைத்தே தீருவோம்'' என்றார்.

மானிப்பாய் வேட்பாளர் திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில், ''இனங்கள் ஒற்றுமையாக வாழ்வதற்குரிய முயற்சியில் நாம் பாடுபட்டோம். அதுபயனற்றுப் போய்விட்டதால்தான் தமிழ் ஈழக்கோரிக்கை விழ்ந்தது'' என்றார்.

வட்டுக்கோட்டை த. வி. கூ. வேட்பாளர் திரு. ரி. திருநாவுக்கரசு உட்பட மற்றும் பலரும் பேசினர். (உ)

## புதிய கல்வித்திட்டத்தில் கலைஞர்களுக்கு விசேட இடம்

இமையாணன், ஞாயிறு

''நாட்டியக்கலை தெய்வாம்சம் பொருந்தியது. இக்கலையை நல்ல முறையில் பயின்று, சேவையாற்றி வருகின்றார் கலைஞர் வேல் ஆனந்தன். இவருக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தால், இதன்கிழக்கு ஆசியாவிலேயே சிறந்தகலைஞர்களில் ஒருவராகத் திகழ்வார்'' என்று ஆசிரியர் கல்விப்பகுதி கல்விப் பணிப்பாளரான ஜனுப் உவைஸ் அஹமத் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற ஒரு நடனநிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார்.

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை விளையாட்டு மைதான நிதிக்காக மேற்படி கலாசாலை விரிவுரையாளரான கலைஞர் வேல்ஆனந்தனினதும் மாணவர்களினதும் இந்த நடனநிகழ்ச்சி நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஜனுப்உவைஸ் அஹமட் மேலும் பேசுகையில், புதியகல்வித் திட்டத்தில் கலைகளுக்கு விசேட இடம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை தற்போதைய அதிபர் திரு. ஜெயராசா தலைமையில் வளர்ச்சியடைந்துவருகின்றது என்றும் கூறினார்.

கலாசாலை அதிபர் திரு. கா. ஜெயராசா தலைமைவகித்துப் பேசுகையில் 'கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையை மூடுவதா அல்லது தொடர்ந்து நடத்துவதா என்றநிலை இருந்தது. ஜனுப் உவைஸ் அகமட்டின் ஆதரவினாலும் உற்சாகத்தினாலும் தற்பொழுது ஐந்து பயிற்சிகள் இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆசிரிய மாணவர்களின் ஊக்கத்தினால் இக்கலைநிகழ்ச்சி திறப்பட நடைபெற்றுள்ளது' என்றும் கூறினார்.

## 28 தொகுதிகளில் தமிழில் வாக்காளர் பட்டியல்

கொழும்பு, ஞாயிறு

வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட 28தொகுதிகளின் வாக்காளர் பட்டியல் தமிழில் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தமிழர் அதிகமாக வாழும் கொழும்பு மத்தியதொகுதியில் தவறுதலாகவே தமிழில் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படவில்லையென்றும் இதைத் தீர்க்க தாம் உடன்நடவடிக்கை எடுப்பதாகவும் தேர்தல் ஆணையாளர் திரு.பீலிக்ஸ் டயஸ் அபயசிங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்புமத்தியில் வாக்காளர் பட்டியல் தமிழில் தயாரிக்கப்படாததை ஆட்சேபித்து தேர்தல் ஆணையாளருக்கு அரசாங்க எழுதுவினைஞர் சங்க பொதுச்செயலாளர் திரு. கி. பேரின்பநாயகம் அவசர தந்தியொன்றை அனுப்பியதைத் தொடர்ந்தே ஆணையாளர் திரு. பேரின்பநாயகத்துடன் தொடர்புகொண்டு இதனை அறிவித்துள்ளார்.

1956இல் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வாக்காளர்பட்டியலைத் தனிச்சிங்களத்தில் தயாரிக்கும்முயற்சியை எதிர்த்தாரென்றும் அவரின் கருத்தை நியாயமானதென ஏற்றுக்கொண்டே வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட 28 தொகுதிகளின் பட்டியல் தமிழில் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் இம்முறை கொழும்பு மத்தியில்பட்டியல்தமிழில் இல்லாததுஏதோ தவறுதலாகவே நடந்திருக்கவேண்டும் என்றும் திரு.அபயசிங்க தெரிவித்தார். (ம-இ)

## பிரசாரக் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாணத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர், திரு. வெற்றிவேலு யோகேஸ்வரனை ஆதரித்து, நாளை மாலை, இராசாவின் தோட்ட சந்திக்கருகாமையில் பொதுக் கூட்டம் ஒன்றுநடைபெறும்.

திரு. எஸ். யோசப் பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் பிரச்சாரக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களும், இளைஞர், மகளிர் பேரவை உறுப்பினர்களும் உரையாற்றுவர். (கெ)

## இன்று திருவிழா

நல்லூர்-நாயன்மார் கட்டு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் ஆலய மணவாளக் கோலத் திருவிழாவும், சண்டேசுரமூர்த்திப் பிரதிட்டையும் இன்று நிகழும்.

## திடீர் புரட்சி

லண்டன்' ஜூன்.5

செஷல்ஸ் நாட்டில் நடத்தப்பட்ட திடீர் புரட்சி மூலம் இராணுவத் தளங்கள் கைப்பற்றப் பட்டுள்ளன.

திடீர்புரட்சியை அடுத்து விமான நிலையம் மூடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

செஷல்ஸ் ஜனாதிபதி திரு.மென்கலன் லண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டில் கலந்து கொள்ள சென்றிருக்கும் வேளையில் இப்புரட்சி இடம் பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு இந்நாடு பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்றது. இது உலகில் மிகக் குறைந்த ஜனத்தொகை கொண்ட நாடாகும். (உ)

## இன்றைய கூட்டம்

யாழ்ப்பாணம்' திங்கள்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் தொகுதி வேட்பாளர் திரு.வி.யோகேஸ்வரனை ஆதரித்து தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்று இன்று மாலை ஆனைப்பந்தி குருநாதர் சுவாமி கோவிலடியில் நடைபெறவிருக்கிறது.

முன்னாள் யாழ். உதவி மேயர் திரு. என். ரி. செல்லத்துரை தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் திரு.ஏ.அமிர்தலிங்கம் உட்பட கூட்டணி வேட்பாளர் பலரும் உரையாற்றுவர். (உ)

## சாவகச்சேரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யன் கொடிகளுடன் ஊர்வலத்தினை வரவேற்று உற்சாகப்படுத்தினர். உற்சாக மிகுதியால் மக்கள் ஊர்வலத்தின் மீது மலர்மாரி பொழிந்து வாழ்த்துக் கோஷங்கள் எழுப்பினர். பின்னர் சந்தை மைதானத்தில் திரு பாலரத்தினம் தலைமையில் இரவு 11 மணிவரை கூட்டம் நடைபெற்றது. (மட். நிரு)

## மிதிபலகைப் பிரயாணி ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், திங்கள்

மாதகலைச் சேர்ந்த சுந்தரம் என அழைக்கப்படும் வாலிபர் மிதிபலகையில் நிற்கையில் மாதகல் பஸ் புறப்பட்டதனால் அருகிலிருந்த மின் விளக்குக் கம்பத்துடன் மோதுண்டு காயமுற்றார். கூட்ட நெரிசல் காரணமாக மிதி பலகையில் நின்ற இவர் கடுங்காயத்துடன் யாழ். அரசினர்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 28-ம் திகதி இரவும் இதே இடத்தில் இதேவிதமான ஒரு விபத்து நிகழ்ந்துள்ளதாகத் தெரியவருகிறது. (கி-அ)

யாழ். நகரில்

## கத்திக்குத்து சம்பவம்!

யாழ்ப்பாணம், திங்.

கடையில் ஷேர்ட் வாங்கச் சென்ற நபர் ஒருவர் கடைச் சொந்தக்காரரைக் கத்தியால் குத்திய சம்பவம் ஒன்று நேற்றுப்பகல் யாழ்நகரில் நடைபெற்றது.

இச்சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது: திருகோணமலை நிலாவெடியைச்சேர்ந்த இரட்ணசிங்கம் சிவபாலன் என்பவர் முதல் நாள் தனது சிநேகிதருடன் ஷேர்ட் வாங்குவதற்கு ஸ்ரான்லி வீதியிலுள்ள கடைக்குச் சென்றதாகவும், நல்ல ஷேர்ட் இல்லாதுபோகவே பணத்தைக்கொடுத்து, நாளை வருவதாகக் கூறிச்சென்றதாகவும் நேற்றுக்காலை கடைக்குச் சென்று ஷேர்ட்கேட்டதாகவும் மற்றவரைக் கூட்டிக்கொண்டு வரும்படி கடைக்காரர் கூறியதாகவும், அதனைத்தொடர்ந்து கடைக்காரரைக் கத்தியால் குத்திவிட்டு ஓட்டம் பிடித்ததாகவும் அவ்வழியால் சைக்கிளில்வந்த என். எம். கனிபா, ஜெ. பிரதோஸ் ஆகிய இருவரும் துரத்திப்பிடித்து மேற்படிநபரைக் கத்தியுடன் யாழ். பொலிசில் ஒப்படைத்துள்ளதாகவும் கூறப்பட்டது. கத்திக்குத்துக்குள்ளான எல். ஏ. றஸாக் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (கு)

## இன்று வேட்புமனு...

(1-ம் பக்கத்தொடர்ச்சி))

(சேவல்).

### 32 நிலையங்கள்

நாடு பூராவும் இன்று அபேட்சகர்களின் நியமனப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள மொத்தம் 32 தேர்தல் நியமன நிலையங்கள் செயற்படும். இவற்றுக்குப் பொறுப்பாக அவ்வப்பகுதி அரசாங்க அதிபர்கள் தேர்தல் அதிகாரிகளாகக் கடமையாற்றுவார்கள்.

நியமனங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், தேர்தலில் குதித்துள்ளோரின் பெயர், விபரங்களை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒலிபரப்பும்.

நாட்டின்சகல பகுதிகளிலும் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஊர்வலங்கள் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளன. மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பொலிஸாரின் கண்காணிப்பு இன்று கடுமையாக இருக்கும்.

### தமிழ்ப் பகுதியில்

யாழ்ப்பாணம் செயலகத்தில் ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, மானிப்பாய், கோப்பாய், உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய 11 தொகுதிகளில் போட்டியிடும் அபேட்சகர்களின் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். மன்னார்த் தொகுதி அபேட்சகர்கள் மன்னார்க் கச்சேரியிலும், வவனியா முல்லைத்தீவு அபேட்சகர்கள் வவனியாக் கச்சேரியிலும், சேருவில, திருகோணமலை, மூதூர் வேட்பாளர்கள் திருகோணமலை நகரசபை மண்டபத்திலும், கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு, அம்பாறைத் தொகுதி அபேட்சகர்கள் மட்டக்களப்புக் கச்சேரியிலும், கல்முனை, புத்தளம் அபேட்சகர்கள் அம்பாறையில் உள்ள அரசாங்க அதிபர் அலுவலகத்திலும் நியமனப் பத்திரங்களைத் தாக்கல்செய்வார்கள்.

இன்று காலை 10 மணி முதல் 11 மணி வரை நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். காலை 11-30 மணி வரை ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

### வட பகுதியில்

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 11 தொகுதிகளிலும் போட்டியிட 62 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். இவர்களில் 43 பேர் சுயேச்சைகளாவர். ஒருவர் பெண் அபேட்சகர்.

பொதுத் தேர்தல் அடுத்த மாதம் 21ந் திகதி நடக்கிறது. தேசியஅரசுப்பேரவை ஆகஸ்ட் மாதம் 26ந் திகதி கூடும். தேசிய அரசுப் பேரவையின் 168 அங்கத்தவர்களைத் தெரிவு செய்ய 160 தொகுதிகளில் தேர்தல் நடைபெறுகிறது.

சமய கலாசார வைபவங்கள் சம்பந்தப்பட்ட வீதிவலம், ஊர்வலம் என்பவற்றுக்கு அனுமதி வழங்கப்படும் எனினும் அவற்றில் அரசியல் கலப்பு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட காலத்தில் பொது இடங்களில் கட்சிச் சுவரொட்டிகள் ஒட்டுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. கட்சி அலுவலகங்கள் தனியாரின் வளவுகள் என்பவற்றில் மட்டும் போஸ்டர்கள் ஒட்ட அனுமதிக்கப்படும் இது போன்றே பொதுஇடங்களில் கட்சிக் கொடிகள் பறக்கவிடுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

கூட்டங்களில் குறிப்பிட்ட நேரம்வரைதான் ஒலிபெருக்கி பாவிக்க அனுமதி வழங்கப்படும் ஆனால் அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களுக்கு இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படும்.

வாகனங்களை ஓரிடத்தில் அறுத்திவைத்துக் கொண்டே மூறிவித்தல்களை ஒலிபெருக்கி மூலம் கூறலாம். அதிலும் திட்டம் நடைபெறும்இடம், எகதி, யார் யார் பேசுவார்கள் என்பது மாத்திரமே கூறவேண்டும். வாகனம் ஓடும்போது அறிவித்தல்களைச் செய்வதோ இசைத்தட்டுகளைப் போட்டு ஒலிபரப்புவதோ சொற்பொழிவு ஆற்றுவதோ முடியாது.

மோட்டார் வாகனங்கள் ஊர்வலமாகச் செல்வதும் தடைசெய்யப்படும்.

கூட்டங்கள் நடைபெறும் இடங்களிலும் பேச்சாளர்கள் தகாத முறையில் தாக்கினைப் பூசல்கள் உண்டு பண்ணும் விதத்தில் பேசுகிறார்களா என்று பொலிசார் கவனிப்பார்கள்.

### தபால்மூலம் வாக்களிப்பு

தபால் மூலம் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றவர்கள் நாளை முதல் பத்து நாட்களுக்குள் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டும். நாளை வேட்பாளர் மனுக்கள் தாக்கல் செய்யப்படும் போது அது தொடர்பான ஆட்சேபனை தெரிவிக்க காலை 11 மணிமுதல் 11-30 மணிவரை அவகாசம் அளிக்கப்படும் என்று தேர்தல் கமிஷனர் அறிவித்துள்ளார்.

வேட்பாளர் பற்றிய விபரங்கள் பிற்பகல் 1 மணியில் இருந்து ஒவ்வொரு முப்பது நிமிடங்களுக்கும் ஒருதடவை வானொலியில் அறிவிக்கப்படும். செய்தி அறிக்கைகளிலும் இவை சேர்த்துக்கொள்ளப்படும். (உ)

## 'ஒருமைப்பாடுகாப் பதில் எழுத்தாளர் பங்கு'

சென்னை, ஜூன் 5

'நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதில் எழுத்தாளர்களுக்கும் பங்கு உண்டு' என்று பாரதப் பிரதமர் திரு.மொராஜிதேசாய் கூறினார்.

## திருமலையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளதாக அறிவிக்கப்படுகிறது.

### மூவர் மரணம்

திருமலையில் இன்று சமாதான மாநாடு நடைபெற்றதாகவும் இதில்இணக்கம்காண முடியாமல் போனதாகவும் கூறப்படுகிறது. இதேசமயம் இக்கலவரத்தில் மூவர் இறந்துள்ளதாகவும்கடைசிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389 Registered as News paper in Sri Lanka.